**இந்திய ரிசர்வ் வங்கி**
**भारतीय रिज़र्व बैंक**
**RESERVE BANK OF INDIA**
**Website: www.rbi.org.in**

**RBI/2016-17/112**
**DCM (Plg) No.1226/10.27.00/2016-17** நவம்பர் 08, 2016

தலைவர் / மேலாண்மை இயக்குநர் /
தலைமை செயல் அதிகாரி
பொதுத்துறை வங்கிகள் / தனியார் துறை வங்கிகள் /
அயல்நாட்டு வங்கிகள் / பிராந்திய கிராமப்புற வங்கிகள் /
நகரக் கூட்டுறவு வங்கிகள் / மாநில கூட்டுறவு வங்கிகள் /

அன்புடையீர்

**நடப்பிலிருந்த ரூ. 500 மற்றும் ரூ. 1000 வங்கி நோட்டுகள் சட்டப்படி செல்லுபடியாகும் நிலையிலிருந்து விலக்கிக்கொள்ளப்பட்டன**

இந்திய அரசு, அரசிதழ் அரிவிக்கை எண் 2652 (நவம்பர் 08, 2016 தேதியிட்டதன்) மூலம் இந்திய ரிசர்வ் வங்கி வெளியிட்ட முன்னர் புழக்கத்திலிருந்த ரூ. 500 மற்றும் ரூ. 1000 மதிப்பிலக்க வங்கி நோட்டுகள் நவம்பர் 09, 2016 முதல் (அந்த அறிவிக்கையில் குறிப்பிட்டுள்ள வகையில்) சட்டப்படி செல்லுபடியாகாது என்று அறிவித்தது. நம் நாட்டின் கலாசார பாரம்பரியம் மற்றும் விஞ்ஞான சாதனைகளை உயர்த்திக் காட்டும் வகையில் புதிய வித்தியாசமான வடிவமைப்பு மற்றும் அளவில் மகாத்மா காந்தி புதிய வரிசை நோட்டுகள் வெளியிடப்பட உள்ளன.. செல்லுபடியாகாத இந்தக் குறிப்பிட்ட நோட்டுகளை டெபாசிட் செய்யவோ அல்லது செல்லும்படியாகும் இதர மதிப்பிலக்க நோட்டுகளாக மாற்றிக் கொள்ளவோ பொதுமக்கள் நாடும் முதன்மை முகமைகளாக வங்கிகள் விளங்கும். பொதுமக்கள் இத்தகைய பரிவர்த்தனைகளை டிசம்பர் 30, 2016 அன்றும் அதற்கு முன்பாகவும் மேற்கொள்ளலாம். ஆகவே, வங்கிகள் இந்தப் பணிக்கு மிக அதிகமான முக்கியத்துவத்தை அளிக்கவேண்டும்.

பொதுமக்கள் தங்கள் வசமுள்ள ரூ. 500 மற்றும் ரூய1000 நோட்டுகளை மாற்றிக்கொள்ள ஏதுவாக வங்கிகள் பின்வரும் ஏற்பாடுகளைச் செய்திடவேண்டும்.

**2. நவம்பர் 09, 2016 அன்று எடுக்கவேண்டிய நடவடிக்கைகள்**

(i) அனைத்து வங்கிகளுக்கும் நவம்பர் 09, 2016 வர்த்தகமில்லாத வேலைநாளாக இருக்கும். ஆயினும் வங்கிக்கிளைகள் அரசின் இத்திட்டத்தைச் செயல்படுத்துவதற்கு உரிய பணிகளை இந்த சுற்றறிக்கையின்படி செய்திடவேண்டும்.

(ii) ATM-கள் பணம்வழங்கிகள், சுழற்சி எந்திரங்கள், நாணயம் அளிக்கும் எந்திரங்கள் அல்லது ஏதாவது ஒரு வகையில் பணம் கொடுக்கும் எந்திரங்கள்

CIT குழுமங்கள், வங்கி வர்த்தக ஏற்பாட்டாளர்கள் ஆகியவைகள்/ ஆகியவர்களிடமுள்ள மேற்குறிப்பிட்ட வங்கி நோட்டுகளை மீட்டுப் பெறவேண்டும். வெள்ளைவில்லை ATM-களின் ஆதரவு வங்கியாளர்கள், இந்தக் குறிப்பிட்ட நோட்டுகளை இந்த ATM-களில் இருந்து மீட்டுப் பெறுவதற்கு பொறுப்பேற்க வேண்டும்.

(iii) நவம்பர் 09, 2016 முதல் வங்கிக் கிளைகள், வர்த்தக ஏற்பாட்டாளர்கள் மூலம் குறிப்பிட்ட மதிப்பிலக்க வங்கி நோட்டுகள் மக்களுக்கு வழங்கப்படுவதை நிறுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும்.

(iv) பணத்தை கொடுத்தல் / ஏற்றல் முதலியனவற்றைச் செய்யும் அனைத்து ATM-கள், பணம் ஏற்கும் எந்திரங்கள் பணச்சுழற்சி எந்திரங்கள் ஆகியவை நவம்பர் 09 மற்றும் நவம்பர் 10, 2016 ஆகிய தேதிகளில் மூடப்பட்டிருக்கும்.

(v) அனைத்து ATM-கள், பணம் வழங்கிகளின் கணிப்புக்கூறுகள் மாற்றப்பட்டு, நவம்பர் 11, 2016 முதல் மறுசீரமைக்கப்பட்டு மீண்டும் செயல்படத் தொடங்கப்படுவதோடு, அவற்றின் மூலம் ரூ. 100 & 50 மதிப்பிலக்க நோட்டுகள் வழங்க வழிவகை செய்யப்பட வேண்டும். ஆயினும் வங்கிகள் புதிய காந்தி வரிசை நோட்டுகளை எந்திரங்கள் மூலம் வழங்குவதற்கு வங்கிகள் இந்திய ரிசர்வ் வங்கியின் அறவுறுத்தல்களுக்காக காத்திருக்க வேண்டும். எனினும் நவம்பர் 09, 2016 முதல் அவை முகப்புகளில் வழங்கப்படலாம்.

(vi) வங்கிகள் ஒழுங்குமுறைச் சட்டம் 1949-ல் கூறியபடி உள்ள ஒவ்வொரு வங்கிக்குழுமம் மற்றும் ஒவ்வொரு கருவூலம் பின்னிணைப்பு-1ல் குறிப்பிடப்பட்டுள்ள படிவத்தில் நவம்பர் 08, 2016 அன்று வேலை நேர முடிவில் வைத்திருந்த குறிப்பிடப்பட்ட வங்கி நோட்டுகள் பற்றிய விவரங்களை நவம்பர் 10, 2016, 1 மணிக்குள் அந்த வங்கியின் தலைமை அலுவலகம் இருக்கும் ஆட்சிப்பரப்பெல்லைக்குரிய இந்திய ரிசர்வ் வங்கி மண்டல அலுவலகத்திற்கு அனுப்பவேண்டும். அந்த படிவத்தில் கையிருப்பிலுள்ள பணத்தைத் தவிரவும், ATM-கள் பண வழங்கிகள் இதர எந்திரங்களிலிருந்து நாணயம் வழங்கும் எந்திரங்கள், CIT குழுமங்கள், வர்த்தக ஏற்பாட்டாளர்கள் ஆகியோரிடமிருந்து மீட்டுப்பெற்ற குறிப்பிட்ட மதிப்பிலக்க நோட்டுகளின் விவரங்களும் தெரிவிக்கப்படவேண்டும்.

(vii) இவ்வாறு வங்கிகள் வசமுள்ள குறிப்பிட்ட மதிப்பிலக்க நோட்டுகள் தொடர்புடைய பணக்கருவூலக்கிளை / இந்திய ரிசர்வ் வங்கியிடம் டெபாசிட் செய்யப்பட்டு, அந்தந்த வங்கிக்கணக்கில் வரவு வைக்கப்பட ஏற்பாடுகள் செய்யப்படவேண்டும்.

(viii) வங்கிகள் தத்தம் பணத் தேவைகளை மதிப்பீடு செய்து, இதர செல்லுபடியாகும் மதிப்பிலக்க வங்கி நோட்டுகளை அருகிலுள்ள கருவூலக்கிளை / இந்திய ரிசர்வ் வங்கியிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

(ix) டிசம்பர் 30, 2016 வரை பணம் ஏற்கும் எந்திரங்கள் மேற்குறிப்பிட்ட மதிப்பிலக்க நோட்டுகளைத் தொடர்ந்து ஏற்றுக்கொள்ளவேண்டும்.

(x) மேற்குறிப்பிட்ட மதிப்பிலக்க நோட்டுகள் செல்லுபடியாகாது என்ற அறிவிப்பைத் தொடர்ந்து (பின்னிணைப்பு-2) அளித்திட்ட விவரங்கள், புதியதாக வெளியிடப்படவிருக்கும் மகாத்மா காந்தி வரிசை நோட்டுகளின் முக்கிய

அம்சங்கள் போன்ற தகவல்கள் அச்சிடப்பட்டு, நகலெடுக்கப்பட்டு போதுமான அளவு பொதுமக்களுக்கு அறிவூட்டும் வண்ணம் வழங்கப்படவேண்டும். அவை வங்கி வளாகத்தில் அறிவிப்புப் பலகையில் வைக்கப்படலாம். ATM மையங்களிலும் வைக்கப்படலாம்.

(xi) வங்கிகள், நோட்டுகள் மாற்றும் முகப்புகளில் பணிபுரியத் தக்க பணியாளர்களைத் தேர்நேதெடுத்து அவர்களுக்குச் சுருக்கமாக இத்திட்டம் பற்றியும், பின்பற்றவேண்டிய செயல்முறைபற்றியும் தெரிவிக்க வேண்டும்., நோட்டு மாற்றும் முகப்புகளில் பணிபுரியும் பணியாளர்களுக்கு பின்னிணைப்பு-4ல் காணப்படும் இதுகுறித்த “அடிக்கடி கேட்கப்படும் கேள்விகள்“ நகல் அளிக்கப்படலாம்.

(xii) வங்கிகள் போதிய அளவு நோட்டுகளை எண்ணும் எந்திரங்கள், அல்ட்ரா வயலட் விளக்குகள், நோட்டுகளைப்பிரிக்கும் எந்திரங்கள் ஆகியவற்றை முகப்புகளில் கூடுதலான வேலைப் பளுவை சமாளிக்கும் வண்ணம் வழங்கி, நேரத்தே கள்ளநோட்டுகள் கண்டுபிடிக்கப்படுவதையும் உறுதி செய்திட வேண்டும். சுற்றறிக்கை எண் DCM (FNVD) No. 1134/16.01.05/2016-17, அக்டோபர் 27, 2016 தேதியிட்டதில் அறிவுறுத்தியுள்ளபடி, வங்கி வளாகம், முகப்புகள் உள்ள பகுதிகளில் கண்காணிப்புக் காமிராக்கள் பொருத்தப்பட்டு அவற்றின் பதிவுகள் பாதுகாக்கப்படவேண்டும்.

**3. நவம்பர் 10, 2016 அன்று எடுக்கவேண்டிய நடவடிக்கை**

(a) வங்கிகள் சாதாரண வேலை நாட்களைப் போல், நவம்பர் 10, 2016 அன்று இயங்கத் தொடங்கும்.

(b) வங்கிகள் குறிப்பிட்ட நோட்டுகளை மாற்றுகின்ற வசதியை செய்து தரும் பணிக்கு மிக அதிக முன்னுரிமை அளிக்க வேண்டும். கூடுதலான முகப்புகள் அமைக்கப்பட்டு, பொதுமக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யக் கூடுதல் நேரமும் பணிபுரியத் தயாராக இருக்கவேண்டும். பெருமளவு வங்கிப் பணியாளர்கள் இந்த வேலைக்கு ஒதுக்கப்படவேண்டும். கூடுதல் வேலை பளுவைச் சமாளிக்க ஓய்வுபெற்ற பணியாளர்களைக்கூட தற்காலிகமாகப் பணியமர்த்திக்கொள்ளலாம்.

(c) **நோட்டுகளை மாற்றும் வசதி**

வங்கிகள், அரசுக் கருவூலங்கள் தவிர [பாரா (1) உப-பாரா (1)ல் கூறப்பட்டுள்ளபடி] இந்தக் குறிப்பிட்ட நோட்டுகளை வைத்திருக்கும் ஒரு நபர் அவற்றை கீழே குறிப்பிட்ட நிபந்தனைகளுக்கு உட்பட்டு இந்திய ரிசர்வ் வங்கி, பொதுத்துறை வங்கி, தனியார், அயல்நாட்டு வங்கி, பிராந்திய கிராமப்புற வங்கி, நகரக் கூட்டுறவு வங்கி, மாநில கூட்டுறவு வங்கி ஆகியவற்றின் ஏதாவது ஒரு கிளையில் டிசம்பர் 30, 2016 (அன்றும்) வரையிலும் மாற்றிக்கொள்ளலாம்.

(i) மொத்தம் ரூ. 4000 மதிப்பு வரையுள்ள குறிப்பிட்ட நோட்டுகளை இந்திய ரிசர்வ் வங்கியால் வடிவமைக்கப்பட்ட விண்ணப்பப் படிவத்துடன், அடையாளச் சான்றாவணத்துடன், வங்கிகளில் கொடுத்து செல்லுபடியாகும் எந்தவொரு மதிப்பிலக்க நோட்டுகளாகவும் மாற்றிக்கொள்ளலாம். குறிப்பிட்ட நோட்டுகளை மாற்றிக்கொள்வதற்கான உச்சவரம்பு ரூ. 4000 என்பது இந்த அறிக்கை வெளியான நாள்தொடங்கி 15 நாட்களுக்குப்பின் மறுபரிசீலனை செய்யப்பட்டு உரிய ஆணைகள் தேவைப்படும் இடங்களில் வெளியிடப்படும்.

(ii) குறிப்பிட்ட நோட்டுகளை வங்கிக் கணக்குகளில் டெபாசிட் செய்திட உச்சவரம்பு ஏதுமில்லை. ஆயினும், நடப்பிலுள்ள உங்கள் வாடிக்கையாளரை அறிவீர் (KYC) நிபந்தனைகள் பூர்த்திசெய்யப்படாத வங்கிக் கணக்குகளில் அதிகபட்சமாக ரூ. 50,000/- வரை டெபாசிட் செய்யலாம்.

(iii) வங்கிக் கணக்கு வைத்திருக்கும் நபர் செலுத்தும் இந்தக் குறிப்பிட்ட நோட்டுகளின் மதிப்பு, உரிய வங்கிநடைமுறையைப் பின்பற்றி, அடையாளச் சான்றாவணம் காட்டப்பட்டபின், அவரின் கணக்கில் வரவுவைக்கப்படும்.

(iv) மூன்றாம் நபருக்காக (அடுத்தவர்) குறிப்பிட்ட நோட்டுகளை அந்த நபரின் கணக்கில் வரவுவைக்க செலுத்த வேண்டுமானால், அதன் பொருட்டு, செலுத்தும் நபருக்கு உரிய அதிகாரம் அளிக்கப்பட்டிருக்க வேண்டும். செலுத்துபவர் தனது அடையாளச் சான்றாவணத்தைக் (பின்னிணைப்பு-5ல் உள்ளபடி) காண்பிக்க வேண்டும். அதன் பின், செலுத்தப்பட்ட நோட்டுகளின் மதிப்பு மூன்றாம் நபருடைய கணக்கில் வரவுவைக்கப்படும்.

(v) நவம்பர் 24, 2016 (வேலை நேரம் முடியும் வரை) ஒரு நாளைக்கு ரூ. 10,000 வரையிலும், ஒட்டு மொத்தமாக ஒரு வாரத்திற்கு (அறிவிப்பு தொடங்கிய நாள் முதல்) ரூ. 20,000 வரை மட்டும் வங்கிக் கணக்கிலிருந்து ஒருவர் வங்கி முகப்பில் எடுக்கமுடியும். இந்த வரம்புகள் பின்னர் மறு பரிசீலனை செய்யப்படும்.

(vi) இவ்வாறு வங்கிக் கணக்கில் வரவு வைக்கப்பட்ட பணத்தை எந்தவிதத் தடையுமின்றி, ரொக்கம் தேவையில்லாத வகையில் காசோலை வழங்கவோ, மின்னணு நிதிமாற்றம் (உ-ம். NEFT, RTGS, IMPS, மொபைல் பேங்கிங், இணையதள வங்கிப் பணமாற்றம்) செய்யவோ பயன்படுத்திக்கொள்ளலாம்.

(vii) அனைத்து தானியங்கி பணம் வழங்கும் எந்திரங்கள் (ATMs) மூலம் நவம்பர் 18, 2016 வரை, ஒரு நாளைக்கு ஒரு அட்டைக்கு ரூ. 2,000 வரை பணம் வழங்கப்படும். அது பின்னர் நவம்பர் 19, 2016 முதல் வரம்புத் தொகை ரூ. 4,000 ஆக உயர்த்தப்படும்.

(viii) டிசம்பர் 30, 2016-அன்றோ அல்லது அதற்கு முன்பாகவோ, இவ்வாறு இந்த ரூபாய் நோட்டுகளை வங்கியில் டெபாசிட் செய்யவோ அல்லது பணமாக மாற்றிக் கொள்ளவோ ஒருவரால் முடியாது போனால், இந்திய ரிசர்வ் வங்கியால் பின்னர் அறிவிக்கப்படும் தேதிவரை, இந்திய ரிசர்வ் வங்கியின் குறிப்பிட்ட அலுவலகங்களில் இதற்கான வசதி செய்து தரப்படும் அல்லது ஏதாவது மாற்று ஏற்பாடு செய்து தரப்படும்.

(ix) வங்கிக் கிளைகளைப் போலவே வர்த்தக ஏற்பாட்டாளர்கள் இந்தக் குறிப்பிட்ட மதிப்பிலக்க நோட்டுகளை மாற்றி மற்ற நோட்டுகளை வாடிக்கையாளர்களுக்கு அடையாளச் சான்றாவணம் மற்றும் விண்ணப்பம் அளிக்கப்படும்பட்சத்தில் ரூ. 4000 வரை வழங்க அனுமதி அளிக்கப்படலாம். இதற்கு ஏதுவாக, வங்கிகள் தங்கள் விருப்பத்தின்பேரில் வர்த்தக ஏற்பாட்டாளர்கள் தத்தம் கைவசம் வைக்கக் கூடிய ரொக்க இருப்பு வரம்புகளை டிசம்பர் 30, 2016 வரை உயர்த்தலாம்.

(x) ஜன்தன் யோஜனாக் கணக்குகளைப் பொருத்தவரை இந்தக் குறிப்பிட்ட மதிப்பிலக்க நோட்டுகளை வரவு வைக்கும்போது நடப்பிலிருக்கும் வரம்பு எல்லைகள் பொருந்தும்.

**4.அறிக்கை அளிக்கும் முறைகள்**

வங்கிக் கிளை ஒவ்வொன்றும், நவம்பர் 10, 2016 முதல் டிசம்பர் 30, 2016 வரை (அல்லது இந்திய ரிசர்வ் வங்கியால் பின்னர் அறிவிக்கப்படும் தேதி வரை) ஒவ்வொரு நாளின் வேலை நேரமுடிவில் அது மாற்றித்தந்த குறிப்பிட்ட நோட்டுகளைப் (ரூ.500, ரூ.1000) பற்றிய அறிக்கையை ரிசர்வ் வங்கி வடிவமைக்கும் படிவத்தில், மின்னஞ்சல் அல்லது நகலனுப்பி மூலம் அந்தந்த வங்கியின் கட்டுப்பாட்டு அலுவலகத்திற்கு பின்னிணைப்பு 6-ல் உள்ளபடி அனுப்பிட வேண்டும். இந்தக் கட்டுப்பாட்டு அலுவலகங்கள் இவற்றை ஒருங்கிணைத்து பின்னிணைப்பு 6A-ல் உள்ளபடி, இந்திய ரிசர்வ் வங்கியின் பண மேலாண்மைத் துறை, மைய அலுவலகத்திற்கு மின்னஞ்சல் மூலமாக தினமும் அனுப்பவேண்டும்.

**5.** வங்கிகள் தத்தம் கிளைகளுக்கு இத்திட்டத்தின் அம்சங்கள், வழிகாட்டுதல்களை கவனித்து உன்னிப்பாக பின்பற்றுமாறு விரிவான அறிவுறுத்தல்களை அனுப்பிடவேண்டும். வங்கிக் கிளைகளிலுள்ள பணியாளர்கள் குறிப்பாக முகப்புகளில் பணியாற்றுவோர் இது குறித்து தெளிந்த அறிவு பெறுதல் அவசியம். இதுகுறித்த விவரங்களை நமது இணையதளமான www.rbi.org.in மற்றும் அரசு நிதி அமைச்சகத்தின் இணையதளத்தையும் அணுகி அறிந்து பயன்பெறலாம் பணியாளர்கள் பின்னிணைப்பு 4-ல் கொடுக்கப்பட்டுள்ள அடிக்கடி கேட்கப்படும் கேள்விகள் - பதில்கள் பகுதியை நன்றாகப் படித்து லகுவாக செயல்பட தேர்ச்சி பெறவேண்டும்.

**6.** பின்னிணைப்பு-2, 3 மற்று 4-ல் உள்ள தகவல்களின் பிரதிகள் எடுத்து பொதுமக்களுக்கு அவற்றை விநியோகிக்கவேண்டும்.

**7.** வங்கி வர்த்தக ஏற்பாட்டாளர்கள் சுவிட்ச் செயல்பாட்டாளர்கள், CIT குழுமங்கள் ஆகியோருக்கு இத்திட்டத்திற்கு தொடர்புடைய வகையில் தகுந்த வழிகாட்டுதல்களை வழங்க வேண்டும்.

**8.** வங்கிகள் இத்திட்டத்தின் அலமாக்கத்தைத் தினசரி அடிப்படையில் ஒரு மையக் கண்காணிப்பு அமைப்பின் மூலம் கண்காணிக்கவேண்டும். அதன் தலைவராக விளங்கும் தொடர்பு அதிகாரி பொதுமேலாளர் நிலைக்கும் கீழே இல்லாத அதிகாரியாக இருக்கவேண்டும். அந்தத் தொடர்பு அதிகாரியின் முகவரி மற்றும் தொடர்பு விவரங்கள் உரிய இந்திய ரிசர்வ் வங்கி மண்டல அலுவலகத்திற்கு (அதன் ஒரு நகல் இந்திய ரிசர்வ் வங்கி மைய அலுவலகத்திற்கும்) மின்னஞ்சல் மூலமாக பின்வரும் வகையில் அனுப்பப்படவேண்டும்.

**9.** இந்திய ரிசர்வ் வங்கி அதன் மைய அலுவலகத்தில் ஒரு கட்டுப்பாட்டு அறையை அமைத்துள்ளது. அதன் மூலம் இத்திட்டத்தின் செயல்பாடு, முன்னேற்றம் ஆகியவற்றை கண்காணிப்பதோடு, வங்கிகள் மற்றும் பொதுமக்களுக்கு வழிகாட்டுகிறது. இந்த கட்டுப்பாட்டு அறையின் தொலைபேசி எண்கள், மின்னஞ்சல் முகவரி பின்வருமாறு.

E.mail:
Telephone: 022 22602804
022-22602944

10. பெற்றுக்கொண்டமைக்கு ஒப்புதல் அனுப்புக.

இங்ஙனம்

(P. விஜயகுமார்)
தலைமைப் பொதுமேலாளர்

இணைப்பு - மேலே கூறியுள்ளபடி

**இணைப்பு - 1**

**வங்கிக் கிளைகள் நவம்பர் 09, 2016 அன்று மதியம் 1 மணிக்குள் தங்களின் கட்டுப்பாட்டு அலுவலகங்களுக்கு அனுப்பவேண்டிய அறிக்கை**

வங்கிகள் நவம்பர் 08, 2016 அன்று நள்ளிரவு இருப்பில் வைத்திருந்த, ATM-கள், பண சுழற்சி எந்திரங்கள், பணவழங்கி எந்திரங்கள், நாணயம் அளிக்கும் எந்திரங்கள் அல்லது பணத்தை ஏற்கும் / கொடுக்கும் எந்திரங்களில் உள்ள ரூ.500 மற்றும் ரூ. 1000 சட்டப்படி செல்லுபடியாகா நோட்டுகள் விவரங்கள்.

| மதிப்பிலக்கம் | எண்ணிக்கை | மொத்தமதிப்பு |
|---|---|---|
| ரூ. 500 | | |
| ரூ. 1000 | | |
| மொத்தம் | | |

வங்கிக் கிளை பொறுப்பு அதிகாரியின் பெயர் -

பொறுப்பு அதிகாரியின் கையொப்பம் -

தேதி -

இடம் -

**இணைப்பு - 2**

**500 மற்றும் 1,000 ரூபாய் மதிப்பிலக்க நோட்டுகள் சட்டப்படி செல்லுபடியாகும் நிலையிலிருந்து விலக்கிக்கொள்ளப்படுகின்றன - நோட்டுகளின் முக்கிய அம்சங்கள்**

1. இந்திய ரிசர்வ் வங்கியால் நவம்பர் 08, 2016 வரை வெளியிடப்பட்டு வந்த மகாத்மா காந்தி வரிசை நோட்டுகளில் ரூ. 500 மற்றும் ரூ. 1000 மதிப்பிலக்க ரூபாய் நோட்டுகளின் (இவை பின்னர் குறிப்பிட்ட நோட்டுகள் எனக் குறிப்பிடப்படும்) சட்டப்படி செல்லுபடியாகும் தன்மையை இந்திய அரசாங்கம் எண் 2652, நவம்பர் 08, 2016 தேதியிட்ட அறிவிக்கை மூலம் ரத்து செய்து விட்டது. இந்த நோட்டுகள் நவம்பர் 09, 2016 முதல் பட்டுவாடா அல்லது கணக்குத் தீர்வுக்கு சட்டப்படி செல்லுபடியாகாது.

2. வங்கி அல்லது கருவூலம் அல்லாத ஒரு நபர், குறிப்பிட்ட நோட்டுகளை வைத்திருப்பாரானால், அவற்றை, இந்திய ரிசர்வ் வங்கியின் 19 வழங்கல் அலுவலகங்கள் மற்றும் பொதுத்துறை வங்கிகள், தனியார்துறை வங்கிகள், பன்னாட்டு வங்கிகள், பிராந்திய கிராமப்புற வங்கிகள், நகர்ப்புற கூட்டுறவு வங்கிகள், மாநிலக் கூட்டுறவு வங்கிகள் ஆகியவற்றின் கிளைகளில் டிசம்பர் 30, 2016 அன்றும் / வரையிலும், பின்வரும் நிபந்தனைகளுக்கு உட்பட்டு மாற்றிக் கொள்ளலாம்.

(a) மொத்தம் ரூ. 4000 மதிப்பு வரையுள்ள குறிப்பிட்ட நோட்டுகளை இந்திய ரிசர்வ் வங்கியால் வடிவமைக்கப்பட்ட விண்ணப்பப் படிவத்துடன் (இணைப்பு-5-ல் உள்ளபடி), அடையாளச் சான்றாவணத்துடன், வங்கிகளில் கொடுத்து செல்லுபடியாகும் எந்தவொரு மதிப்பிலக்க நோட்டுகளாகவும் மாற்றிக்கொள்ளலாம்.

(b) மாற்றப்படும் நோட்டுகளின் மதிப்பு ரூ. 4000-த்தைத் தாண்டுமானால், அதிகமாக உள்ள தொகை அளிப்பவரின் வங்கிக்கணக்கில் வரவு வைக்கப்படும். குறிப்பிட்ட நோட்டுகளை வங்கிக்கிளைகள் அல்லது இந்திய ரிசர்வ் வங்கியின் வழங்கல் அலுவலகங்களில் மாற்றிக்கொள்வதற்கான உச்சவரம்பு ரூ. 4000 என்பது இந்த அறிக்கை வெளியான நாள்தொடங்கி 15 நாட்களுக்குப்பின் மறுபரிசீலனை செய்யப்படும்.

(c) குறிப்பிட்ட நோட்டுகளை வங்கிக் கணக்கு உள்ள கிளைகளில் அவரவர் கணக்குகளில் டெபாசிட் செய்திட உச்சவரம்பு ஏதுமில்லை. .

(d) வங்கிக் கணக்கு வைத்திருக்கும் நபர் செலுத்தும் இந்த குறிப்பிட்ட நோட்டுகளின் மதிப்பு, உரிய வங்கிநடைமுறையைப் பின்பற்றி, அடையாளச் சான்றாவணம் காட்டப்பட்டபின், அவரின் கணக்கில் வரவுவைக்கப்படும்.

(e) மூன்றாம் நபருக்காக (அடுத்தவர்) குறிப்பிட்ட நோட்டுகளை அந்தநபரின் கணக்கில் வரவுவைக்க செலுத்த வேண்டுமானால், அதன்பொருட்டு, செலுத்தும் நபருக்கு உரிய அதிகாரம் அளிக்கப்பட்டிருக்க வேண்டும். செலுத்துபவர் தனது அடையாளச் சான்றாவணத்தைக் கண்பிக்க வேண்டும். அதன் பின், செலுத்தப்பட்ட நோட்டுகளின் மதிப்பு மூன்றாம்நபருடைய கணக்கில் வரவுவைக்கப்படும்.

(f) நடப்பிலுள்ள உங்கள் வாடிக்கையாளரை அறிவீர் (KYC) நிபந்தனைகள் பூர்த்தி செய்யப்படாத வங்கிக் கணக்குகளில் அதிகபட்சமாக ரூ.50,000/- வரை டெபாசிட் செய்யலாம்

(g) நவம்பர் 24, 2016 (வேலைநேரம் முடியும் வரை) ஒரு நாளைக்கு ரூ. 10,000 வரை, ஒட்டு மொத்தமாக ஒரு வாரத்திற்கு (அறிவிப்புதொடங்கியநாள்முதல்) ரூ. 20,000 வரை மட்டும் வங்கிக் கணக்கிலிருந்து ஒருவர் வங்கி முகப்பில் எடுக்கமுடியும். இந்த வரம்புகள் பின்னர் மறு பரிசீலனை செய்யப்படும்

(h) இவ்வாறு வங்கிக் கணக்கில் வரவு வைக்கப்பட்ட பணத்தை எந்தவிதத் தடையுமின்றி, ரொக்கம் தேவையில்லாத வகையில் காசோலை வழங்கவோ, மின்னணு நிதிமாற்றம் (உ-ம். NEFT, RTGS, IMPS, மொபைல் பேங்கிங், இணையதள வங்கிப் பணமாற்றம்) செய்யவோ பயன்படுத்திக்கொள்ளலாம்.

(i) அனைத்து தானியங்கி பணம் வழங்கும் எந்திரங்கள் (ATMs) மூலம் நவம்பர் 18, 2016 வரை, ஒரு நாளைக்கு ஒரு அட்டைக்கு ரூ. 2,000 வரை பணம் வழங்கப்படும். அது பின்னர் நவம்பர் 19, 2016 முதல் வரம்புத் தொகை ரூ. 4,000 ஆக உயர்த்தப்படும்.

(j) டிசம்பர் 30, 2016-அன்றோ அல்லது அதற்கு முன்பாகவோ, இவ்வாறு இந்த ரூபாய் நோட்டுகளை வங்கியில் டெபாசிட் செய்யவோ அல்லது பணமாக மாற்றிக் கொள்ளவோ ஒருவரால் முடியாது போனால், இந்திய ரிசர்வ் வங்கியால் பின்னர் அறிவிக்கப்படும் தேதிவரை, இதற்காக கோரப்படும் குறிப்பிட்ட ஆவணங்களுடன் அளித்தால் மாற்று ஏற்பாடு வசதி செய்து தரப்படும்.

**இணைப்பு - 3**

இந்திய ரிசர்வ் வங்கி, மகாத்மா காந்தி (புதிய) வரிசையில் புதிய வடிவமைப்பில் ₹ **20**00 மதிப்பிலக்க நோட்டுகளை விரைவில் வெளியிடுகிறது. புதிய மதிப்பிலக்க நோட்டில், வான்வெளியில் கோள்கள் செல்லும் பாதையில் நம் நாட்டிலிருந்து செலுத்தப்பட்ட முதல் துணைக்கோள் மங்கள்யானை எடுத்துக் காட்டும் உருவப்படம் நோட்டின் பின்புறத்தில் உள்ளது. நோட்டின் வர்ணம் மெஜந்தா. இந்த நோட்டில் வர்ணத்தோடு பொதுவாக இணைந்த வகையில் ஜியோமிதி வடிவங்கள் வேறு வடிவமைப்புகள் முன்புறமும் பின்புறமும் உள்ளன.
இந்த நோட்டின் அளவு 66 மி.மீ. X 166 மி.மீ.

**புதிய 2000 ரூபாய் நோட்டுகளின் முக்கிய அம்சங்கள் பின்வருமாறு:**

**முன்புறம்**

1. ஊடுருவிப் பார்க்கும் வண்ணம் வெண்மைநிற எழுத்துக்களில் மதிப்பிலக்கம் 2000.
2. மறைந்திருக்கும் வகையில் 2000 என்பது எழுதப்பட்டிருக்கும்.
3. மதிப்பிலக்கம் 2000 தேவநாகிரியில் எழுதப்பட்டிருக்கும்.
4. மகாத்மா காந்தியின் உருவப்படம் நடுவில்.
5. நுண்ணிய எழுத்துக்கள் “RBI” மற்றும் “2000”.
6. ஜன்னல் போன்ற அமைப்பில் ஊடுருவிச் செல்லும் பாதுகாப்பு இழைகள் भारत, RBI, 2000, வர்ணம் மாறும் வகையில் எழுதப்பட்டிருக்கும். நோட்டை அசைத்துப்பார்த்தால் இவை பச்சையிலிருந்து நீலமாக நிறம் மாறும்.
7. உத்தரவாதம், ஆளுநர் கையெழுத்து, உறுதிமொழி மற்றும் இந்திய ரிசர்வ் வங்கியின் சின்னம் ஆகியவை நோட்டின் வலப்புறம்.
8. மகாத்மா காந்தியின் உருவப்படம் மற்றும் 2000 என்ற எண்ணும் நீர்க்குறியீடாக இருக்கும்.
9. நோட்டின் வரிசை எண்கள் இருபக்கமும் (மேலே இடப்புறம், கீழே வலப்புறம்) அளவில் சிறியதிலிருந்து பெரியதாகத் தோன்றும் வகையில் அச்சிடப்படிருக்கும்.
10. மதிப்பிலக்கம் 2000 என்பது ரூபாயின் குறியீடு ₹ உடன் நோட்டின் கீழ்ப்புறம் வலது பக்கத்தில் நிறம் மாறும் வகையில் (பச்சையிலிருந்து நீலமாக) எழுதப்பட்டிருக்கும்.
11. அசோகாத் தூண் சின்னம் வலப்புறம்.

**பார்வைக் குறைபாடு உடையவர்களுக்காக**

மகாத்மா காந்தி உருவப்படம், அசோகாத்தூண் சின்னம், குறுக்குக் கோடுகள் மற்றும் அடையாள வடிவம் ஆகியவை தடவி உணரும் அச்சு வகையில் அமைக்கப்பட்டிருக்கும்.

12. வலப்புறம் குறுக்கு வாக்கில் சிறிய செவ்வக வடிவம், மேலெழும்பிய வகையில் ₹ 2000.

13. ஒரு கோணத்தில் வரையப்பட்ட ஏழு குறுக்குக் கோடுகள் இடப்புறம் மற்றும் வலப்புறம் மேலெழும்பிய வகையில் அச்சிடப்பட்டிருக்கும்.

**பின்புறம்**

14. அச்சிடப்பட்ட ஆண்டு.
15. “தூய்மை இந்தியா“ சின்னம், அதன் கருத்து வாசகத்துடன்.
16. இந்திய மொழிகளின் வரிசை நோட்டின் மையப்பகுதியை நோக்கி.
17. மங்கல்யானின் உருவப்படம் - நம் நாட்டிலிருந்து செலுத்தப்பட்ட முதல் செயற்கைக் கோள்.

ரூபாய் நோட்டுகளில் உள்ள பாதுகாப்பு அம்சங்கள் விவரமாக https://paisaboltahai.rbi.org.in என்ற இணையதளத்தில் உள்ளன.

புதிய வடிவமைப்பிலுள்ள இதர மதிப்பிலக்க நோட்டுகள் பின்னர் வெளியிடப்படும்.

மகாத்மா காந்தி வரிசை (புதிய) ₹ 500 மதிப்பிலக்க வங்கி நோட்டுகள், குறிப்பிடப்பட்ட வங்கி நோட்டுகள் (விலக்கப்பட்ட வரிசையிலிருந்து) மாறுபட்ட வர்ணம், அளவு, கருத்து, பாதுகாப்பு அம்சங்கள் அமைந்துள்ள இடம் மற்றும் வடிவமைப்புகள். நோட்டின் அளவு 66 மி.மீ. X 150 மி.மீ. நோட்டின் வர்ணம் சாம்பல் கல் நிறம் மற்றும் இந்திய தேசியக் கொடியுடன் இந்தியப் பாரம்பரியத்தை உணர்த்தும் செங்கோட்டையின் வடிவம் பின்புறத்தில்.

**புதிய 500 ரூபாய் நோட்டுகளின் முக்கிய அம்சங்கள் பின்வருமாறு:**

**முன்புறம்**

1. ஊடுருவிப் பார்க்கும் வண்ணம் வெண்மைநிற எழுத்துக்களில் மதிப்பிலக்கம்.
2. மறைந்திருக்கும் வகையில் மதிப்பிலக்கம் எழுதப்பட்டிருக்கும்.
3. மதிப்பிலக்கம் தேவநாகிரியில் எழுதப்பட்டிருக்கும்.
4. மகாத்மா காந்தியின் உருவப்படம் அமைப்பு மற்றும்இடம் மாற்றியமைக்கப்பட்டுள்ளது..
5. ஜன்னல் போன்ற அமைப்பில் ஊடுருவிச் செல்லும் பாதுகாப்பு இழை நோட்டை அசைத்துப்பார்த்தால் பச்சையிலிருந்து நீலமாக நிறம் மாறும் வகையில் இருக்கும்..
6. உத்தரவாதம், ஆளுநர் கையெழுத்து, உறுதிமொழி மற்றும் இந்திய ரிசர்வ் வங்கியின் சின்னம் ஆகியவை நோட்டின் வலப்புறம்.
7. மகாத்மா காந்தியின் உருவப்படம் மற்றும் மதிப்பிலக்கம் நீர்க்குறியீடாக இருக்கும்.
8. நோட்டின் வரிசை எண்கள் இருபக்கமும் (மேலே இடப்புறம், கீழே வலப்புறம்) அளவில் சிறியதிலிருந்து பெரியதாகத் தோன்றும் வகையில் அச்சிடப்படிருக்கும்.
9. மதிப்பிலக்கம் எழுத்துக்களில் ரூபாயின் குறியீடு ₹ உடன் நோட்டின் கீழ்ப்புறம் வலது பக்கத்தில் நிறம் மாறும் வகையில் (பச்சையிலிருந்து நீலமாக) எழுதப்பட்டிருக்கும்.
10. அசோகாத் தூண் சின்னம் வலப்புறம்.

**பார்வைக் குறைபாடு உடையவர்களுக்காக**

மகாத்மா காந்தி உருவப்படம், அசோகாத்தூண் சின்னம், குறுக்குக் கோடுகள் மற்றும் அடையாள வடிவம் ஆகியவை தடவி உணரும் அச்சு வகையில் அமைக்கப்பட்டிருக்கும்.

11. வலப்புறம் குறுக்கு வாக்கில் சிறிய வட்ட வடிவம், மேலெழும்பிய வகையில் ₹ 500.

12. ஒரு கோணத்தில் வரையப்பட்ட ஐந்து குறுக்குக் கோடுகள் இடப்புறம் மற்றும் வலப்புறம் மேலெழும்பிய வகையில் அச்சிடப்பட்டிருக்கும்.

**பின்புறம்**

13. இடப்புறம் அச்சிடப்பட்ட ஆண்டு.
14. "தூய்மை இந்தியா" சின்னம், அதன் கருத்து வாசகத்துடன்.
15. இந்திய மொழிகளின் வரிசை நோட்டின் மையப்பகுதியை நோக்கி.
16. பின்புறத்தில் இந்திய தேசியக் கொடியுடன் இந்தியப் பாரம்பரியத்தை உணர்த்தும் செங்கோட்டையின் வடிவம்
17. நோட்டின் மதிப்பிலக்கம் தேவநாகரியில் வலப்புறம்.

புதிய வடிவமைப்பிலுள்ள இதர மதிப்பிலக்க நோட்டுகள் பின்னர் வெளியிடப்படும்.

ரூபாய் நோட்டுகளில் உள்ள பாதுகாப்பு அம்சங்கள் விவரமாக https://paisaboltahai.rbi.org.in என்ற இணையதளத்தில் உள்ளன.

**இணைப்பு - 4**

**ரூ. 500 மற்றும் ரூ. 1000 மதிப்பிலக்க நோட்டுகள் சட்டப்படி செல்லுபடியாகும் நிலையிலிருந்து விலக்கிக்கொள்ளப்பட்டன (அறிவுப்பு வெளியான தேதி நவம்பர் 08, 2016)**

**1. இத்திட்டம் ஏன் அறிமுகப்படுத்தப்பட்டது?**

உயர் மதிப்பிலக்க நோட்டுகளில் கள்ளநோட்டுகளின் புழக்கம் அதிகரித்துள்ளது. இந்த கள்ளநோட்டுகளில் பாதுகாப்பு அம்சங்கள் இல்லாதபோதிலும், இவை உண்மையான ரூபாய் நோட்டுகளைப் போலவே சாதாரண மக்களுக்கு காட்சியளிக்கின்றன. இந்த கள்ளநோட்டுகள் சமூக விரோத, தேச விரோத செயல்களுக்குப் பயன்படுத்தப்படுகின்றன். கருப்புப் பணத்தைப் பதுக்கி வைக்கவும், இந்த உயர்மதிப்பிலக்க நோட்டுகள் பயன்படுத்தப்படுகின்றன. இந்தியாவில் பணப் பரிவர்த்தனைகள் அதிக அளவில் இருப்பதால் கள்ளநோட்டுகளின் பிரச்சனை தொடர்கிறது. கள்ள நோட்டுகளின் புழக்கம், கருப்புபண பதுக்கல் இவற்றை ஒழித்திட இத்திட்டம் அறிமுகம் செய்யப்படுகிறது.

**2. இத்திட்டத்தின் விவரம் என்ன?**

இந்திய ரிசர்வ் வங்கியால் வெளியிடப்பட்டு, நவம்பர் 08, 2016 வரை புழக்கத்திலிருந்த ரூ. 500 மற்றும் ரூ. 1000 மதிப்பிலக்க நோட்டுகள் (இவை 'குறிப்பட்ட வங்கி நோட்டுகள்' என்றே பின்வரும் இடங்களில் சுட்டிக்காட்டப்படும்) சட்டப்படி செல்லுபடியாகும் நிலையிலிருந்து விலக்கிக் கொள்ளப்படுகின்றன. இதன் விளைவாக பரிவரித்தனை நடத்தவோ, வருங்காலப் பயன்பாட்டிற்காக பாதுகாத்து வைக்கவோ இவை மதிப்பற்றவை ஆகிவிட்டன. இந்தக் குறிப்பட்ட வங்கி நோட்டுகளை இந்திய ரிசர்வ் வங்கியின் 19 அலுவலகங்களிலோ அல்லது ஏதாவது வங்கிக் கிளையிலோ, தலைமை அஞ்சல் அலுவலகம் அல்லது கிளை அஞ்சல் அலுவலகத்திலோ மாற்றிக்கொள்ளலாம்.

**3. இந்த நோட்டுகளுக்கு எவ்வளவு மதிப்பு எனக்குக் கிடைக்கும்?**

நீங்கள் வங்கிக்கிளைகள் / இந்திய ரிசர்வ் வங்கி அலுவலகங்களில் அளிக்கும் நோட்டுகளின் மொத்த மதிப்பையும் நீங்கள் பெறமுடியும்.

**4. அனைத்தும் எனக்குப் பணமாகவே கிடைக்குமா?**

இல்லை. நீங்கள் எவ்வளவு நோட்டுகளை அளித்தாலும், ஒருவருக்கு ரூ. 4,000 வரை மட்டுமே ரொக்கமாக வழங்கப்படும். மீதித்தொகை உங்கள் வங்கிக் கணக்கில் வரவு வைக்கப்படும்.

**5. நான் அனைத்தையுமே ரொக்கமாக வங்கியிடம் கொடுக்கும்போது எனக்கு ஏன் ரொக்கமாகவே மாற்றித் தரக்கூடாது?**

இத்திட்டத்தின் நோக்கத்தைக் கருத்தில் கொள்வதால் இதற்கு அதில் இடமில்லை.

**6. ரூ. 4000 எனக்குப் போதாது, நான் என்ன செய்வது?**

உங்கள் வங்கிக் கணக்கிலிருக்கும் பனத்தைப் பயன்படுத்தும் வகையில் காசோலை அல்லது மின்னணு நிதிமாற்றம் மூலம் உங்கள், பட்டுவாடாக்களை / செலவுகளை செய்து

கொள்ளலாம். இணையதள வங்கி / மொபைல் வாலட் / IMPS / கடன் / பற்று அட்டை ஆகியவைகளை உபயோகிக்கலாம்.

**7. எனக்கு வங்கிக் கணக்கு இல்லையென்றால் என்ன செய்வது?**

நீங்கள் எப்போது வேண்டுமானாலும் KYC நிபந்தனைகளைப் பூர்த்தி செய்யத் தேவையான சான்றாவணங்களுடன் அருகிலுள்ள வங்கிக் கிளையை அணுகி கணக்குத் தொடங்கலாம்.

**8. எனக்கு ஜன் தன் யோஜனா கணக்கு மட்டும்தான் உள்ளதென்றால் நான் என்ன செய்வது?**

ஜன் தன் யோஜனா கணக்கு வைத்துள்ள நபர். அத்தகு கணக்கிலுள்ள வரம்புகளுக்குட்பட்டு, நடைமுறைகளைப் பின்பற்றி நோட்டுகளை மாற்றிக்கொள்ளும் வசதிகளைப் பெறலாம்.

**9. நான் நோட்டுகளை எங்கு மாற்றிக்கொள்ளலாம்?**

இந்திய ரிசர்வ் வங்கியின் அனைத்து வழங்கல் அலுவலகங்கள், வணிக வங்கிகளின் கிளைகள் / பிராந்திய கிராமப்புற வங்கிகள் / நகரக்கூட்டுறவு வங்கிகள் / மாநில கூட்டுறவு வங்கிகள், தலைமை / கிளை அஞ்சல் அலுவலகங்கள் இவை எங்கு வேண்டுமானாலும் நோட்டுகளை மாற்றிக்கொள்ளலாம்.

**10. நான் என்னுடைய வங்கிக் கிளைக்குத்தான் போக வேண்டுமா?**

ரூ. 4000 வரை முகப்பில் மாற்றிக்கொள்ள நீங்கள் அடையாள சான்றாவணத்துடன் எந்தவொரு வங்கிக்கிளையையும் அணுகலாம். ரூ. 4000-த்திற்கும் அதிகமாக இருப்பின் அவற்றை உங்கள் வங்கிக் கணக்கில் டெபாசிட் செய்ய நீங்கள் கணக்கு வைத்துள்ள வங்கிக்கு அல்லது அதன் கிளைக்கோ போகலாம். ஒருவேளை இதற்காக நீங்கள் வேறெரு வங்கிக்குப் போக நேரிட்டால், உங்களின் அடையாளச் சான்றாவணம், வங்கிக் கணக்கு விவரங்கள் ஆகியவற்றைச் சமர்ப்பித்து அந்த தொகையைக் கணக்கில் மின்னணு நிதிமாற்றம் மூலம் வரவு வைக்க ஏற்பாடு செய்யலாம்.

**11. நான் எனது வங்கியின் எந்தக் கிளைக்கு வேண்டுமானாலும் போகலாமா?**

ஆம். உங்கள் வங்கியின் எந்தக் கிளையையும் அணுகலாம்.

**12. நான் வேறொரு வங்கிக் கிளைக்குப் போகலாமா?**

ஆம். நீங்கள் வேறொரு வங்கிக் கிளைக்கும் போகலாம். அப்போது நீங்கள் உங்களின் அடையாளச் சான்றாவணத்தைக் காட்டி ரொக்கமாகப் பெறலாம். மாற்றிக்கொள்ளும் தொகை ரூ. 4000-க்கும் அதிகமாக இருந்தால், அடையாளச் சான்றாவணத்துடன் ங்கள் வங்கிக் கணக்கு விவரத்தை அளித்தால், மின்னணு நிதிமாற்றம் மூலம் கணக்கில் வரவு வைக்கமுடியும்.

**13. எனக்கு வங்கிக் கணக்கு இல்லை. ஆனால் எனது நணபருக்கு / உறவினருக்கு கணக்கு உள்ளது. அதன்மூலம் நோட்டுக்களை மாற்றிக்கொள்ள முடியுமா?**

ஆம். அந்த நண்பரோ, உறவினரோ எழுத்து வடிவில் உங்களுக்கு இதற்கு அனுமதி அளித்திருந்தால் முடியும். அத்துடன் உங்களின் அடையாளச் சான்றாவணத்தையும் காட்டி நீங்கள் நோட்டுகளை மாற்றிக்கொள்ளலாம்.

14. **நான் வங்கிக்கு நேரில் போக வேண்டுமா? அல்லது எனது பிரதிநிதியாக யாரையாவது அனுப்ப முடியுமா?**

நேரில் வங்கிக்கு செல்வது சிறப்பானது. ஒருவேளை உங்களால் போக முடியாதபட்சத்தில் உங்கள் சார்பில், எழுத்துமூலம் அதிகாரமளித்து வேறொருவரை வங்கிக்கு அனுப்பலாம். அந்தப் பிரதிநிதிக்கு அதிகாரமளிக்கும் கடிதத்துடன், தனது அடையாளச் சான்றாவணத்தையும் வங்கியிடம் காட்டி நோட்டுகளை மாற்றலாம்.

**15. தானியங்கி பணம் வழங்கும் எந்திரத்திலிருந்து பணம் எடுக்கமுடியுமா?**

ATM-களின் கணிப்புக் கூறுகளை மாற்றியமைக்க சிறிது காலம் பிடிக்கும். ATM-கள் தயார்நிலை அடைந்ததும் நவம்பர் 18, 2016 வரை நாளொன்றுக்கு ஒரு அட்டைக்கு ரூ. 2000 வரை எடுக்கலாம். நவம்பர் 19, 2016-க்குப் பிறகு இந்த வரம்பு ரூ. 4000 ஆக உயர்த்தப்படும்.

**16. காசோலைக்கு எதிராக ரொக்கத்தைப் பெறமுடியுமா?**

ஆம். நீங்கள் பணம் எடுக்கும் சீட்டு அல்லது காசோலை மூலமாக, ஒரு நாளைக்கு ரூ. 10,000 வரை ஒட்டுமொத்தமாக ஒரு வாரத்திற்கு ரூ. 20,000 வரை (ATM-களில் எடுத்த பணத்தையும் சேர்த்து) நவம்பர் 24, 2016 வரை எடுக்கமுடியும். பின்னர் இந்த வரம்புகள் மறு ஆய்வு செய்து மாற்றப்படலாம்.

17. **ATM-கள், பணம் ஏற்கும் / சுழற்சி எந்திரங்கள் மூலம் இந்தக் குறிப்பிட்ட நோட்டுகளை வங்கியில் டெபாசிட் செய்யமுடியுமா?**

ஆம். இந்த குறிப்பிட்ட நோட்டுகளை பணம் ஏற்கும் / சுழற்சி எந்திரங்கள் ATM-கள் மூலம் டெபாசிட் செய்யலாம்.

**18. மின்னணு நிதிமாற்றம் (NEFT / RTGS / IMPS / Internet Banking / Mobile Banking, etc.) முறைகளை இதற்குப் பயன்படுத்தமுடியுமா?**

நீங்கள் NEFT / RTGS / IMPS / Internet Banking / Mobile Banking போன்ற என்த பணம்சாரா பட்டுவாடா முறையையும் இப்போது பயன்படுத்தலாம்.

**19. இந்த நோட்டுகளை மாற்ற எனக்கு எவ்வளவு கால அவகாசம் உள்ளது?**

இத்திட்டம் டிசம்பர் 30, 2016 உடன் முடிவடைகிறது. டிசம்பர் 30, 2016 வரை இந்தக் குறிப்பிட்ட நோட்டுகளை வணிகவங்கிகள், பிராந்திய கிராமப்புற வங்கிகள், கூட்டுறவு வங்கிகள், மாநில கூட்டுறவு வங்கிகள் மற்றும் இந்திய ரிசர்வ் வங்கியில் மாற்றிக்கொள்ளலாம்.

**20. தற்சமயம் நான் இந்தியாவில் இல்லை. நான் என்ன செய்யவேண்டும்?**

நீங்கள் இந்தியாவில் இந்தக் குறிப்பிட்ட நோட்டுகளை வைத்திருந்தால், எழுத்துப்பூர்வமாக இங்கிருக்கும் ஒருவருக்கு அதிகாரமளித்து அந்த நோட்டுகளை உங்கள் வங்கிக் கணக்கில் டெபாசிட் செய்யலாம். உங்களால் அதிகாரமளிக்கப்பட்ட நபர் உரிய கடிதம் மற்றும் அடையாளச் சான்றாவணத்துடன் (ஆதார் அட்டை, ஓட்டுநர் உரிமம்,

வாக்காளர் அடையாள அட்டை, கடவுச்சீட்டு, NREGA அட்டை, வருமானவரிக் கணக்கு எண் (PAN) அட்டை, அரசுத் துறைகள் மற்றும் பொதுத் துறை நிறுவனங்களால் வழங்கப்பட்ட பணியாளர் அடையாள அட்டைகள்) நேரில் வங்கிக்கு வந்து நோட்டுகளை டெபாசிட் செய்யவேண்டும்.

**21. நான் ஒரு வெளிநாடு வாழ் இந்தியர், எனக்கு NRO கணக்கு உள்ளது. இந்த குறிப்பிட்ட நோட்டுகளின் மதிப்பு என்னுடைய கணக்கில் வரவு வைக்கப்படலாமா?**

ஆம். குறிப்பிட்ட வங்கி நோட்டுகளை உங்களின் NRO கணக்கில் வரவுவைக்கலாம்.

**22. நான் ஒரு அயல்நாட்டுச் சுற்றுலாப் பயணி. என்னிடம் இந்த நோட்டுகள் உள்ளன. நான் என்ன செய்யவேண்டும்?**

இந்தக் குறிப்பிட் நோட்டுகளைப் பயன்படுத்தி ரூ. 5000 வரை அந்நிய செலாவணியை விமானிலையத்திலுள்ள பணமாற்று முகப்புகளில் இந்த அறிவிப்பு வெளியிடப்பட்ட நாளிலிருந்து 72 மணி நேரத்திற்குள் மாற்றிப் பெறலாம். ஆனால், இந்தக் குறிப்பிட்ட நோட்டுகளை வாங்கியதற்கான சான்றாவணத்தை நீங்கள் காட்டவேண்டும்.

**23. எனக்கு அவசரத் தேவைக் (மருத்துவமனை, பயணம், உயிர்காக்கும் மருந்துகள்)காகப் பணம் தேவைப்படுகிறது. நான் என்ன செய்யவேண்டும்?**

அரசு மருத்துவமனைகளில் மருத்துவமனைக் கட்டணத்தை இந்தக் குறிப்பிட்ட நோட்டுகளைப் பயன்படுத்தி செலுத்தலாம். பேருந்துக் கட்டணம் (அரசுப் பேருந்துகள்) அல்லது பொதுத்துறை பேருந்துக் கட்டணங்கள், ரயில் கட்டணம், ஆகாய விமானப் பயணச்சீட்டு ஆகியவற்றை, அறிவிப்பு வெளியான பின் 72 மணிநேரத்திற்குள் இந்த நோட்டுகளைப் பயன்படுத்திப் பெற்றுக்கொள்ளலாம்.

**24. அடையாளச் சான்றாவணம் என்பது என்ன?**

ஏற்கப்படும் அடையாளச் சான்றாவணம் என்பது பின்வருவனவற்றில் ஏதாவது ஒன்றாக இருக்கலாம். ஆதார், ஓட்டுநர் உரிமம், வாக்காளர் அடையாள அட்டை, கடவுச் சீட்டு, NREGA அட்டை, அரசுத்துறை அல்லது பொதுத்துறை நிறுவனங்கள் தத்தம் பணியாளர்களுக்கு வழங்கும் அடையாள அட்டைகள்.

**25. எங்கே இந்தத் திட்டம் குறித்து அதிக விவரங்கள் கிடைக்கும்?**

இந்திய ரிசர்வ் வங்கியின் இணையதளமான www.rbi.org.in மற்றும் மத்திய அரசின் இணையதளம்.

**26. எனக்கு இதில் ஏதாவது பிரச்சினை என்றால், யாரை அணுகலாம்?**

இந்திய ரிசர்வ் வங்கியின் கட்டுப்பாட்டு அறையை மின்னஞ்சல் மூலம் அல்லது தொலைபேசி எண்கள் **022-22602201 / 022-22602944** மூலம் தொடர்புகொள்ளலாம்.

**இணைப்பு-5**

**பழைய உயர் மதிப்பிலக்கு ரூபாய் 500 மற்றும் 1000 நோட்டுகளை மாற்றுவதற்கான விண்ணப்பம்**

**வங்கிக்கிளையின் பெயர் -**

<table>
<tr><td>நோட்டு மாற்றுபவரின் பெயர்<br>(பெரிய எழுத்துகளில் எழுதவும்)</td><td></td></tr>
<tr><td>அசல் அடையாள அட்டையை முகப்புகளில் காட்டவும்.<br><br>(எது உங்களிடம் உள்ளதோ அதை √ செய்யவும்)</td><td>ஆதார் அட்டை, ஓட்டுநர் உரிமம், வாக்காளர் அடையாள அட்டை, கடவுச்சீட்டு, NREGA அட்டை, வருமானவரிக் கணக்கு எண் (PAN) அட்டை.<br><br>அரசுத் துறைகள் மற்றும் பொதுத் துறை நிறுவனங்களால் வழங்கப்பட்ட பணியாளர் அடையாள அட்டைகள்,</td></tr>
<tr><td>அடையாள எண்<br>(நீங்கள் காண்பித்த அசல் அடையாள அட்டையில் உள்ள எண்)</td><td></td></tr>
<tr><td>மாற்றுவதற்காக அளிக்கப்பட்ட ரூபாய் நோட்டுக்களின் விவரங்கள்</td><td><table><tr><th>மதிப்பிலக்கம்</th><th>எண்ணிக்கை</th><th>மதிப்பு</th></tr><tr><td>ரூ. 500</td><td></td><td></td></tr><tr><td>ரூ. 1,000</td><td></td><td></td></tr><tr><td>மொத்த மதிப்பு</td><td></td><td></td></tr></table><br>மொத்தமதிப்பு ரூபாய் - வார்த்தைகளில்:</td></tr>
<tr><td>நோட்டு மாற்றுபவரின் கையெழுத்து</td><td></td></tr>
<tr><td>இடம் :</td><td></td></tr>
<tr><td>தேதி :</td><td></td></tr>
</table>

## பழைய உயர் மதிப்பிலக்க ரூபாய் 500 மற்றும் 1000 நோட்டுகளை மாற்றிக் கொடுத்த விவரங்களை கட்டுப்பாட்டு அலுவலகத்திற்கு தினசரி அளிக்கும் படிவம்

வங்கியின் பெயர் -

வங்கிக்கிளையின் பெயர் -

| மதிப்பிலக்கம் | நோட்டுகளின் எண்ணிக்கை | மொத்த மதிப்பு |
|---|---|---|
| ரூ. 500 | | |
| ரூ. 1000 | | |
| மொத்தம் | | |

வங்கிக் கிளையின் பொறுப்பதிகாரியின் பெயர் -

பொறுப்பதிகாரியின் கையொப்பம் -

தேதி -

இடம் -

**இணைப்பு-6A**

**வங்கிக் கிளைகளில் பழைய உயர் மதிப்பிலக்க ரூபாய் 500 மற்றும் 1000 நோட்டுகளை மாற்றிக் கொடுத்த விவரங்களை இந்திய ரிசர்வ் வங்கியின் மைய அலுவலகத்திற்கு மின்னஞ்சல் மூலம் தினசரி அளிக்கும் படிவம்**

வங்கியின் பெயர் -

வங்கிக்கிளையின் பெயர் -

| மதிப்பிலக்கம் | நோட்டுகளின் எண்ணிக்கை | மொத்த மதிப்பு |
|---|---|---|
| ரூ. 500 | | |
| ரூ. 1000 | | |
| மொத்தம் | | |

வங்கியின் அறிக்கை அளிக்கும் அதிகாரியின் பெயர் -

அறிக்கை அதிகாரியின் கையொப்பம் -

தேதி -

இடம் -